# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 8 ஆம் ஞாயிறு | 2 மார்ச் 2025


**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**



மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

குடும்பம் (உடன் பயணம்) குடும்ப மதிப்பீடுகளையும் உறவையும் பேண அழைப்பு

# கடவுளை அன்பு செய்வது, அடுத்திருப்பவரையும் பூமியையும் அன்பு செய்வது

திருத்தந்தை பிரான்சிஸ் தனது லாவ்டாதோ சி என்னும் சுற்றுமடலில் இவ்வாறு கூறுகிறார். மனிதவாழ்வு என்பது மூன்று அடிப்படை உறவுகளில் அடங்கியுள்ளது. கடவுளோடும், அடுத்திருப்பவரோடும் மற்றும் பூமியோடும் இணைந்துள்ளது.

(எண்:66) கடவுள், மனிதர்கள் மற்றும் பூமிக்கு இடையே உள்ள இந்த முக்கிய உறவின் உணர்வை இன்று நாம் வாசிக்கும் திருப்பாடலின் உருவகத்தில் வெகு ஆர்வத்தோடு உணரமுடியும். அதாவது கடவுளுக்கு நெருக்கமானவர் பேரீச்சை மரத்தைப் போல செழித்தும் லெபனான் நாட்டு கேதுரு மரத்தைப்போல தழைத்தும் வளர்வர் என்னும் உருவகங்களால் உணரமுடியும். வயது முதிர்ந்தாலும் கடவுளின் முற்றங்களில் செழித்து கனிதருவர், இன்னும் பசுமையாகவும், பழச்சாறு நிறைந்த கனிகளையும் தருவார்கள்.

பாவம், இந்த உறவை முறித்தது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். இப்போது இந்த மூன்று முக்கிய உறவுகளுக்கிடையே முரன்பாடு எழுந்துள்ளது. இதன் விளைவாக, மனிதர்கள் தங்களுக்குரிய வரம்புகளை ஏற்றுக்கொள்ள மறுத்து, கடவுளின் இடத்தைப் பிடித்துக்கொள்ள விரும்புகின்றனர். பூமியின் மீது தாங்கள் ஆதிக்கம் கொண்டவர்கள் என்று நினைக்கிறார்கள். மனிதர்கள் மற்ற மனிதர்களையும் பூமியையும் தங்கள் சொந்த நோக்கங்களுக்காக "பயன்படுத்தலாம்" மற்றும் சுரண்டலாம் என்ற இந்த "தவறான எண்ணம்" ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. "பார்வையற்றவர்கள் பார்வையற்றவர்களை வழிநடத்துவது" போல ஒவ்வொரு தலைமுறையும் அடுத்தவர்களை மேலும் குழப்பத்திலும் மற்றும் மனிதகுலத்தையும் பூமியையும் அழிக்கும் பாதையிலும் வழிநடத்துகிறது

இன்றைய நற்செய்தி வாசகம், மரம் மற்றும் அதன் பழங்களின் உருவகத்துடன் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலும், கடவுள், மனிதர்கள் மற்றும் இயற்கைக்கு இடையிலான முறிந்த உறவையும் எடுத்துக்காட்டுகிறது. "கெட்ட கனிதரும் நல்ல மரமுமில்லை; நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். . அடிப்படையில் ஒரு நபர் கடவுளுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கவில்லை என்றால், அவர் தனது அடுத்திருப்பவருடனும் மற்றும் பூமியோடும் உண்மையான உறவைக் கொண்டிருக்கத் தவறிவிடுகிறார்.

இதனால் தான் திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு ஒருங்கிணைந்த சூழலியலின் அவசியத்தைப் பற்றி பேசுகிறார். அதாவது, கடவுளோடும் அடுத்திருப்பவர் மற்றும் பூமியுடனும் உறவை மதிப்பவரே இதைக் கருத்தில் கொள்வார். திருத்தந்தை குறிப்பிடுவதுபோல "நம் இதயங்களில் மென்மை, இரக்கம், மற்றும் சகமனிதர்கள் மீது அக்கறை இல்லாவிட்டால், இயற்கையின் மற்ற பகுதிகளுடன் ஆழ்ந்த தொடர்பும் உணர்வும் உண்மையாக இருக்காது" (எண்:91) சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது பற்றி நாம் பேசும்போது, நமது அடுத்திருப்பவரைப் பற்றியும், குறிப்பாக ஒதுக்கப்பட்ட, ஏழை மற்றும் ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றியும் நாம் பேசவேண்டும். ✤

> குடும்பத்திற்கு பாதுகாக்கும் பணி ஒன்று உண்டு. அன்பை வெளிப்படுத்தவும் தொடர்புகொள்ளவும் வேண்டும். இது வாழும் பிரதிபலிப்பு மற்றும், மனிதகுலத்தின் மீது கடவுள் அன்பை உண்மையாகப் பகிர்ந்துகொள்வதாகும்.
>
> திருத்தந்தை 2ஆம் ஜோன் போல்

**இன்றைய இறைவார்த்தை:**

சீராக்: 27: 4-7

திருப்பாடல்: 92: 2-3, 13-16

1 கொரிந்தியர்: 15: 54-58

லூக்கா 6: 39-45


INTERNAL CIRCULATION ONLY
BUL 09/2025

**Contributed by:** Archdiocesan Office for Human Development (AOHD)
**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org